## ஹோட்டல் மற்றும் உணவக சேவைகளில்

# இந்தியாவில் தமிழ்நாடு முன்னிலை!




சென்னை, டிச. 24 -

ஹோட்டல் மற்றும் உணவக சேவைகளின் மொத்த மதிப்பு சேர்த்தலில் (Gross Value addition) 2023 - 2024 ஆம் நிதியாண்டில் ஒட்டுமொத்த இந்தியாவில் தமிழ்நாடு மிகப் பெரும் பங்களிப்பாளராக உருவெடுத்துள்ளது.

தமிழ்நாட்டைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

மொத்த மதிப்பு சேர்த்தலில் 54 சதவிகிதத்தை கடந்த பங்களிப்புடன், சேவைத் துறை இந்தியப் பொருளாதாரத்தின் மிகப் பெரியதும் மிகச் சுறுசுறுப்பானதும் ஆன கூறாக உள்ளது.

மொத்த மதிப்பு சேர்த்தலில் உயரிய நிலையில் மாநில வாரியாக உள்ள பங்கு வருமாறு:-

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு | – 13.9 | – சதவிகிதம் |
| உத்தரபிரதேசம் | – 12.1 | – சதவிகிதம் |
| மகாராஷ்டிரம் | – 11.7 | – சதவிகிதம் |
| கர்நாடகா | – 11.2 | – சதவிகிதம் |
| ஆந்திரபிரதேசம் | – 6.5 | – சதவிகிதம் |
| கேரளா | – 6.5 | – சதவிகிதம் |
| டெல்லி | – 5 | – சதவிகிதம் |
| மேற்கு வங்கம் | – 4.8 | – சதவிகிதம் |
| தெலுங்கானா | – 4.8 | – சதவிகிதம் |
| ராஜஸ்தான் | – 4.4 | – சதவிகிதம் |



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (22.12.2025) சென்னை, கோட்டூர்புரம், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், எழுத்தாளர் திருமாவேலன் எழுதிய "முறைசெய்து காப்பாற்றும் முதலமைச்சர்" என்ற நூலினை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வெளியிட, நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் பெற்றுக் கொண்டார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள் – கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், அர.சக்கரபாணி, பி.மூர்த்தி, எஸ்.எஸ். சிவசங்கர், முனைவர் கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி கனிமொழி சோமு, அருண் நேரு, முனைவர் க.பொன்முடி உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ் குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி, தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் கோபண்ணா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் டி.கே.எஸ்.இளங்கோவன், ஆர்.எஸ்.பாரதி, ஓய்வுபெற்ற நீதியரசர் சந்துரு, மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், இயக்குநர் அமிர்தம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாதிபதி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், நூல் ஆசிரியர் ப.திருமாவேலன், கருஞ்சட்டை பதிப்பகத்தின் இயக்குநர் பெல் ராஜன், கவிதா பதிப்பகத்தின் சேது சொக்கலிங்கம், சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தின் தலைமை இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் மற்றும் சான்றோர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் விஜய் திருமண மஹாலில் நடைபெற்றது. கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம் முருகன் எம்.எல்.ஏ., கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி கல்யாணம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், தொகுதி பார்வையாளர்கள் என்.இளையராஜா, மன்னை த.சோழராஜன், மு.தினேஷ்குமார், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் ஜெகவீரபாண்டியன், இலக்கிய அணி மாநில துணை செயலாளர் வை. சௌமியா மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு மின் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன் பேசினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப. கோவிந்தராஜன், க. இராஜேந்திரன் மாவட்ட துணை செயலாளர் ஆரூர் மணிவண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.




தமிழர் திருநாளாம்
தைத் திருநாளில் சிந்தனைக்கு
விருந்து படைக்கத் தயாராகிறது

முரசொலி

பொங்கல் மலர்
2026

ஜனவரித் திங்கள்
15ஆம் நாள் வெளிவருகிறது.
முன் பதிவிற்கு முந்துங்கள்...

விலை ரூ.150/-

